BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

# பெரியபுராணம் காட்டும் நாயன்மார்களின் வாழ்வியலில் நெறிபிறழ் உளவியல் கூறுகள்

# Periyapuranam Kaattum Nayanmargalin Vaalviyalil Neripiral Ulaviyal Koorugal

க.கமலப்பிரியா

முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், வேளாளர் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), ஈரோடு – 12

நெறியாளர்: ப.ஈஸ்வரி

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), ஈரோடு – 12

**Kamalapriya. K**

Ph.D in Tamil (Full Time), Department of Tamil, Vellalar College for Women, Erode-12, Tamil Nadu, India

Email: Kamalapriya6022@gmail.com

Supervisor: **Dr.P.Eswari**

Associate Professor, Department of Tamil, Vellalar College for Women, Erode - 12, Tamil Nadu, India

**Abstract**

Periyapuranam written by Sekilar, was a Devotional literature related to Saiva era. It explains about the life and spiritual journey of sixty three nayanmars. The life of nayanmars as depicted in the Periyapuranam, differ fundamentally from normal aspects of human life. While ordinary life focuses on material wealth, self-preservation and societal norms, the nayanmars lived solely for absolute, unconditional devotion to Lord Siva, often disregarding social conventions, wealth and even survival. This article explains about the comparison between Abnormal Psychology with the life of nayamars.

**Key Words**: Psychology, Spiritual, Aspects, Norms

**ஆய்வுச்சுருக்கம்**

அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்வியலை விளக்கும் பெரியபுராணம், அவர்கள் இறைவன் மீது கொண்ட அன்பு நிலையை விவரிப்பதாக அமைந்துள்ளது. இறைவன் மீது பற்று கொண்ட அடியவர்களின் வாழ்வியல், பல்வேறு நிலைகளில் இயல்பான நடத்தை விதிகளுக்கு மாறுபட்டதாகவே அமைகின்றது. பொதுவான இயல்பிற்கு மாறுபட்டதாக அமையும் வாழ்வியலை, நெறிபிறழ் உளவியல் துறையோடு ஒப்புமைபடுத்தி ஆராய்வதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

**குறிச்சொற்கள்**: உளவியல், ஆன்மீகம், தன்மை, நெறிமுறை

## முன்னுரை

மனிதனின் சிந்தனைகள், நடத்தைகள் முதலியவற்றை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்வது உளவியல் துறையாக அமைகின்றது. இதில் நெறிபிறழ் உளவியல் என்பது இயல்பான நடத்தை விதிகளுக்கு மாறான செயல்களைக் குறிப்பதாகும். கண்ணப்பர், காரைக்கால் அம்மையார், சிறுதொண்டர், அப்பூதியடிகளார், இளையான்குடி மாறனார் போன்ற நாயன்மார்களின் வாழ்வியலில் அமைந்துள்ள நெறிபிறழ் உளவியல் கூறுகளை ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது

**உளவியல் கோட்பாடு**

மனிதர்களின் மனம், சிந்தனை மற்றும் நடத்தை ஆகியவற்றை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்யும் துறை, உளவியலாகும். இது செயல்முறை ஆய்வுகளின் அடிப்படையிலான முடிவுகளைச் சார்ந்ததாகக் கருதப்படுகின்றது. உள்ளுணர்வு, அறியும் ஆற்றல், கவனம், ஆளுமை, நடத்தை போன்ற நிலைப்பாடுகள் உளவியலின் அடிப்படைகளாக அமைகின்றன.

**உளவியல் வகைமை**

பொது உளவியல், கல்வி உளவியல், அறிவாற்றல் உளவியல், சமூக உளவியல், உளப்பகுப்பு உளவியல், நடத்தை உளவியல், நெறிபிறழ் உளவியல், பெண்ணிய உளவியல், உடல்சார் உளவியல், அமைப்புநிலை உளவியல், அரசியல் உளவியல், ஒப்பீட்டு உளவியல், நடைமுறை உளவியல், வளர்ச்சி உளவியல், மருத்துவ உளவியல் போன்ற பல்வேறு வகைமைகளை உள்ளடக்கி, உளவியல் துறை பரந்துபட்டதாக அமைகின்றது.

**நெறிபிறழ் உளவியல்**

மனிதர்களின் இயல்புக்கு மாறான எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் நடத்தைகளை ஆய்வு செய்யும் உளவியலின் ஒரு முக்கிய பிரிவாக, நெறிபிறழ் உளவியல் அமைகின்றது. ஒருவர் பக்தி நிலையை அடையும் போது, அவரின் நடத்தை இயல்பான மனித வாழ்வின் நடத்தை விதிகளுக்கு மாறானதாகவே அமைகின்றது. சமூகத்தில் எதிர்பார்க்கப்படும் நடத்தைகளுக்கு எதிரானதாக இறை வாழ்வு அமைகின்றது. பெரியபுராணம் காட்டும் நாயன்மர்களின் வாழ்வியல், இயல்பான நடத்தைகளுக்கு மாறானதாக, பக்தியின் பரந்துபட்ட பரிணாமமாக அமைகின்றது.

**பெரியபுராணத்தில் நெறிபிறழ் உளவியல் பதிவுகள்**

சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம், நாயன்மார்களின் வாழ்வியல் மற்றும் பக்தி நிலையை விளக்குவதாக அமைகின்றது. இறை வழிபாட்டில் ஈடுபாடு கொண்ட நாயன்மார்களின் வாழ்வியலில் பல நிகழ்வுகள் நெறிபிறழ் உளவியல் சார்ந்து அமைகின்றன.

பல நாயன்மார்களின் வாழ்வியலும், இயல்பான வாழ்விற்கு மாறான அதீத பக்தியின் வெளிப்பாடாகவே அமைகின்றன.

**காரைக்கால் அம்மையார்**

காரைக்கால் அம்மையாரின் இறையருள் பற்றி அறிந்த அவரின் கணவன், அம்மையார் இயல்பு வாழ்விலிருந்து மாறுபட்டு இருந்ததனால், இல்லறத்தைவிட்டு பிரியும் எண்ணம் கொண்டு விளகினார். இதனை,

*வணிகனும் தன்கைப் புக்கமாங்கனி*
*பின்கைக் காணான்*
*தணிவரும் பயமேற் கொள்ள உள்ளமுந்*
*தடுமாறெய்தி*[1]

என்ற பெரியபுராண பாடல் வரிகள் விளக்குகின்றன.

தன் கணவன் வேறொரு இல்லறம் மேற்கொள்ளும் செய்தியறிந்த அம்மையார், தன் அழகினை வெறுத்து, இறைவனிடம் வேண்டி, பேய் வடிவம் கொண்டார். கயிலை மலையினை அடைந்த காரைக்கால் அம்மையார், காலால் நடப்பது குற்றமென்று கருதி, தலையால் நடந்து சென்றார் என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். பேய் வடிவம் பெற்றல், தலையால் நடத்தல் போன்ற இந்நிகழ்வுகள் இயல்பிற்கு மாறான நெறிபிறழ் உளவியல் நிலைகளாக அமைகின்றன.

**கண்ணப்பர்**

வேட்டுவ குலத்தில் பிறந்த திண்ணனார், தன் கண்களை இறைவனிற்குக் கொடுத்ததனாலே கண்ணப்பர் என்ற பெயர் கொண்டார்.

*மதர்த்தெழும் உள்ளத்தொடும் மகிழ்ந்துமுன்*
*இருந்து தங்கண்*
*முதற்சர மடுத்து வாங்கி முதல்வர்தங்*
*கண்ணில் அப்ப*[2]

என்ற வரிகள், இறைவன் கண்ணில் குருதி கண்ட கண்ணப்பர் தன் கண்ணைப் பிடுங்கி இறைவனிற்கு வழங்கிய நிகழ்வை எடுத்துரைக்கின்றன. எந்த ஒரு மனிதனும் தன் கண்களைப் பிடுங்கி இறை வடிவம் கொண்ட ஒரு கல்லிற்கு அளிக்க வேண்டும் என்று எண்ணமாட்டான். எனவே இவரின் இறை பக்தி முற்றிலும் இயல்பு விதிகளுக்கு மாறுபட்டதாக,

அதீத பக்தி உணர்வின் வெளிப்பாடாக அமைகின்றது. தன் சுயத்தை மீறிய இறையன்பு வெளிகொணர்வதால், இது நெறிபிறழ் உளவியலோடு தொடர்பு கொண்டதாக அமைகின்றது.

**சிறுதொண்டர்**

கடல் சூழ்ந்த இந்த அகன்ற உலகத்தில் வாழும் மனிதர்களுக்கு, நல்லறிவுடைய மக்களைப் பெறுவதே சிறந்த செல்வமாகப் போற்றப்படுகின்றது என்பதனை,

*ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம் மக்கட்*
*பேற்றிற் பெறும் பேறில்லை*(3)

என்ற முதுமொழிக்காஞ்சியின் வரிகள் விளக்குகின்றன.

இவ்வாறாக பிள்ளைப்பேறு, பிள்ளைகளின் மகிழ்வான வாழ்வு, தன் வாழ்வைவிட பிள்ளைகளின் வாழ்வை பெரிதாகப் போற்றும் நிலை போன்றவையே தமிழ் இலக்கியங்களில் பெரும்பான்மை பதிவு செய்யப்பட்டுள்ளன. பெரியபுராணம் காட்டும் சிறுதொன்டரின் வாழ்வு, இதற்குப் புறம்பாக அமைகின்றது.

*தனையன் தன்னைத் தந்தையாய் அரிவார்*
*இல்லைத் தாழாமே*
*எனைஇங்குய்ய நீபயந்தான் தன்னை*
*அழைப்போமியாம் என்றார்*(4).

என்ற வரிகளில், தன்னை நாடி வந்த அடியார்க்கு உணவு படைக்கும் பொருட்டு, தன் பிள்ளையையே உணவாக அளிக்கும் நிலை காட்சிபடுத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்வு, பெற்றோர் மனநிலை, பிள்ளையின் வாழ்வு நலன் போன்ற இயல்பு வாழ்வின் நெறிகளுக்கு முற்றிலும் எதிரானதாக அமைகின்றது.

**அப்பூதியடிகளார்**

*பெறலரும் புதல்வன் தன்னைப் பாயினுட்*
*பெய்துமூடிப்*
*புறமனை முன்றிற் பாங்கோர் புடையினில்*
*மறைத்துவைத்தே*
*அறஇது தெரியா வண்ணம் அமுதுசெய்*
*விப்போம்*(5)

என்ற வரிகள், பிள்ளை மறைந்த செய்தியினைக் கூறினால், அடியார் உணவு உண்ணமாட்டார் என்று அறிந்து, அச்செய்தியினைக் கூறாமல் மறைத்து, அடியவர்க்கு அமுது படைத்தார் அப்பூதியடிகளார் என்ற நிகழ்வினை காட்சிபடுத்துகின்றன. இவ்வாறான துயர நிலையிலும் இறைத் தொண்டு செய்வது நெறிபிறழ் உளவியலின் பதிவாக அமைகின்றது.

**இளையான்குடி மாறனார்**

வையத்துள் உயிர்கள் வாழ்வதற்கு ஆதாரமாக அமைவது, உழவுத் தொழிலாகும். மற்றவையெல்லாம், அதன் வழித்தொழில்களேயாகும், என்பதனை,

*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்*(6).

என்ற குறள் வழி வள்ளுவர் விளக்குகின்றார்.

வேளாண் குடி மக்கள் தங்களின் குலத்தொழிலான உழவுத் தொழிலினைப் பெரிதும் போற்றுபவராவர். மண்ணில் விதைத்த பயிர்களை, அவை வளர்ந்து செழித்த பின்னர் அறுவடை செய்வதனை வழக்கமாக உடையவர். பயிர்கள் முற்றிலும் விளைவதற்கு முன் எக்காரணத்திற்காகவும், அவற்றை வயலிலிருந்து அகற்ற மாட்டர். ஆனால் மாறனார், வேளான் குடி மரபிற்கு எதிராக, வயலில் விதைத்த நெல்லினை எடுத்து வந்து, அடியார்க்கு அமுது படைத்தார். இது பொதுவான வேளான் குடி மறபிற்கு புறம்பானதாக அமைகின்றது. இதனை,

*புள்ளு றங்கும் வயல்புகப் போயினார்*
*வள்ள லார்இளை யான்குடி மாறனார்*(7).

என்ற பெரியபுராண பாடல் வரிகள் விளக்குகின்றன.

**இயற்பகையார்**

இல்லை என்று கூறாது, அனைவருக்கும் கொடை வழங்க வேண்டும் என்ற கொள்கையுடன் வாழ்ந்தவர், இயற்பகையார் ஆவார். ஒருபொழுது இறைவன் இயற்பகையாரின் மனைவியை கொடையாக வேண்டிய போது, இல்லை என்று கூறாது உடனே ஒப்புக்கொண்டார் என்பதனை,

*மன்னு காதல்உன் மனைவியை வேண்டிவந்த*
*திங்கென அங்கணர் எதிரே*
*சொன்ன போதிலும் முன்னையின் மகிழ்ந்து*
*தூய தொண்டனார் தொழுதுரை செய்வார்*(8)

என்ற பெரியபுராண பாடல் வரிகள் விளக்குகின்றன. இந்நிகழ்வில் தன் மனைவியையே தானமாகக் கொடுப்பதென்பது, இல்லற வாழ்விற்கு, முற்றிலும் எதிர்மறையான செயலாக அமைகின்றது.

**இறையன்பின் வெளிப்பாடு**

அடியார்களின் வாழ்வியல், இயல்பான நடத்தைகளுக்கு மாறுபட்டதாக அமைவதற்கு அவர்கள் இறைவனாகிய சிவபெருமான் மீது கொண்ட அதீத அன்பே காரணமாக அமைகின்றது. அன்பு நிலைதான் சிவம் என்று அறிந்துவிட்டால், பிறகு அவர்களே இன்புருவான சிவமாய் வாழ்வார்கள் என்ற கருத்தினை,

*அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே*[9]

என்று திருமூலர், திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். மனித எண்ணங்கள், வாழ்வு முறை, வாழ்வு நெறி போன்றவற்றிற்கு மாறானதாகவே பக்தி நிலை அமைகின்றது. தன் சுயத்தை மீறியதாக அடியார்களின் இறையன்பு போற்றப்படுகின்ற நிலையில், அவை நெறிபிறழ் உளவியலின் கூறுகளாக அமைகின்றன.

**தொகுப்புரை**

அடியர்களின் வாழ்வியல் மூலம் இறை வழிபாட்டின் பல்வேறு பரிணாமங்களை அறிய முடிகின்றது. இறையன்பின் அதீத வெளிப்பாடு, இயல்பான நடத்தை விதிகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாகவே அமைகின்றது. இந்நிலையில் அடியார்களின் வாழ்வியல், இறை நெறி போன்றவை நெறிபிறழ் உளவியல் சார்ந்ததாக அமைவதனை விவரிப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**அடிக்குறிப்பு**

1) பெரியபுராணம், பா.எண்-1752
2) மேலது, பா.எண்-827
3) முதுமொழிக்காஞ்சி, பா.எண்-61
4) பெரியபுராணம், பா.எண்- 3720
5) மேலது, பா.எண்-1816
6) குறள் – 1033
7) பெரியபுராணம், பா.எண்-456
8) மேலது, பா.எண்-410
9) திருமந்திரம், பா.எண்-270

**துணைநூற் பட்டியல்**


1. ஈரோடு தங்க விசுவநாதன், அறுபத்து மூவர் வரலாறு, கவிதா பப்ளிகேஷன், சென்னை, 2017
2. குமரிச்செழியன், உளவியல், சாரதா பதிப்பகம், சென்னை, 2019
3. கௌமாரீஸ்வரி, எஸ். (பதிப்பாசிரியர்), பொது உளவியல், சாரதா பதிப்பகம், சென்னை, 2012
4. பாலையன், அ.ப.(உரை), பெரியபுராணம், சாரதா பதிப்பகம்,சென்னை, 2018